தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

Website: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**முறையீட்டு மனு எண். 137/மா/2023**

**நாள் 30.12.2024**

திரு ஆர். மயில்சாமி ................ மனுதாரர்
மதுரை.

1) உதவி ஆணையர்.
மண்டலம் 3 (மத்தியம்).
மதுரை மாநகராட்சி.

2) உரிமையாளர்,
சுகம் சிறப்பு மருத்துமனை
மதுரை 16

................ எதிர் மனுதாரர்கள்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5–ல் வசிக்கும் திரு.ஆர்.மயில்சாமி என்பவரின் 10.05.2023 மற்றும் 22.06..2023 நாளிட்ட மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 15.05.2023 மற்றும் 23.06.2023 அன்று பெறப்பட்டு 137/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5–ல் வசிக்கும் திரு ஆர்.மயில்சாமி என்பவர் 10.05.2023 மற்றும் 22.06..2023 நாளிட்ட தனது மனுக்களில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்)–க்கு உட்பட்ட மகபூப்பாளையம், பாரதிதாசன் சாலை, T.B. ரோடு கதவு எண்.99/47–ல் இயங்கி வரும் "சுகம் மருத்துவமனை அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடம் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது. மேலும் சுகம் மருத்துவமனை கட்டிடம் அரசு சட்ட விதிகளின்படி 13 அடி இடைவெளிவிடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் சுகம் சிறப்பு மருத்துவமனை கட்டிடத்திற்கு இரண்டு சக்கர வாகனம், நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு சிறியதளவு கூட இடம் (parking space) இல்லை. வாகனங்களை மெயின்ரோட்டில் நிறுத்துவதினால் வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசணை(நிலை) எண்.175 நாள் 14.7.2006–ன்படி ஆறு, குளம், ஏரி, ஓடை, சுடுகாடு, இடுகாடு, மற்றும் மின்வழிபாதையில்

இருந்து 100 மீட்டர் தூரத்திற்கு இடைவெளிவிட்டு கட்டுமானங்கள் இருக்க வேண்டும். ஆனால் சட்டத்திற்கு புறம்பாக கிருதுமால் நதியை ஆக்கிரமிப்பு செய்து மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. சுகம் மருத்துவமனை பொதுமக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் 1973–ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 33–ன்படி அக்கட்டிடத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தில் முறையாக ஒப்புதல் பெறவில்லை. இந்த சுகம் சிறப்பு மருத்துவமனை கட்டிடத்திற்கு முழுமையாக அளவீடு செய்யாமல் குறைந்தளவு மதிப்பீடு செய்து உள்ளதால் மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்படுகிறது. மேலும் இங்கு பணிபுரியும் மருத்துவர், செவிலியர், துப்புரவு பணியாளர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் இதர ஊழியர்கள் அனைவருக்கும் தொழிலாளர் வரி வசூலிக்க தவறிய சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டிக்கொள்கிறேன்.

2. மனுதாரரின் புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 23.05.2023 நாளிட்ட அறிவிக்கையில் மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி, மண்டலம் 3–ன் உதவி ஆணையர் தன்னுடைய 08.10.2024 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

“சுகம் மருத்துவமனை கட்டிடத்திற்கு வரைபட அனுமதி எண் 753/2009 நாள் 22.10.2009 மூலம் வழங்கப்பட்டுள்ளது. சுகம் மருத்துவமனை கட்டிடம் வார்டு 59 வரிவிதிப்பு எண்.115/323138 கதவு எண்.48 B, பாரதிதாசன் சாலை “Dhan Foundation”. P. Vasumalai, Executive Director என்ற பெயரில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி சுகம் மருத்துவமனைக்கு சொத்துவரி ஆண்டிற்கு ரூ.16,764/- வசூலிக்கப்பட்டு வருகிறது. சுகம் மருத்துவமனைக்கு பார்க்கிங் வசதி இல்லை. கட்டிட அனுமதி 22.10.2009–ல் பெறப்பட்டுள்ளது. சுகம் மருத்துமனையில் பணிபுரியும் 6 பணியாளர்களுக்கு தொழில் வரி, வரி விதிப்பு எண்.115/059/900183-லும் மற்றும் மருத்துவமனைக்கு தொழில் வரிவிதிப்பு எண் 115/059/900182–லும் வசூலிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்.”

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் 17.12.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.12.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 17.12.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்)–க்கு உட்பட்ட மகபூப்பாளையம், பாரதிதாசன் சாலை, TB தெரு, கதவு எண். 99/47- இல் இயங்கும் “சுகம் மருத்துவமனை”

(1) அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

(2) மேற்கண்ட மருத்துவமனை கட்டிடம் சட்ட விதிகளின்படி நான்கு பக்கமும் 6 மீட்டர் இடைவெளிவிடாமல் கட்டப்பட்டுள்ளது.

(3) இவ்மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் வருவோர் வாகனத்தை நிறுத்த போதிய இடவசதி அளிக்கப்படவில்லை.

(4) மேற்கண்ட மருத்துவமனையின் கட்டிடம் கிருதுமால் நதியை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது.

(5) மாவட்ட நகர் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தில் திட்ட அனுமதி பெறவில்லை.

(6) மேற்கண்ட மருத்துவனையின் கட்டிடம் முழுமையாக அளவீடு செய்யப்படவில்லை. இதனால் வருவாய் இழப்பு மதுரை மாநகராட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

மேற்கண்ட புகார்களை தெரிவித்து நடவடிக்கை எடுக்க் கோரியும் மதுரை மாநகராட்சி அலுவலர்களால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன்படியும், உரிய சட்டப்பிரிவுகளின்படியும் நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்''.

6. மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவிப்பொறியாளர்கள் 17.12.2024 அன்றைய நேரடி விசாணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்கள்.

(1) மனுதாரர் குறிப்பிட்டுள்ள சுகம் மருத்துவமனை கட்டிடத்திற்கு வரைபட அனுமதி எண். 753/2009 நாள் 22.10.2009 மூலம் வழங்கப்பட்டுள்ளது.

(2) மேற்கண்ட மருத்துவமனைக்கு பார்க்கிங் வசதி இல்லை.

(3) மேற்கண்ட மருத்துவமனை கிருதுமால் நதியிலிருந்து 3 மீட்டர் இடைவெளியில் கட்டப்பட்டுள்ளது.

(4) கிருதுமால் நதியை ஒட்டி உள்ள பொது பாதை அமைக்க பொதுப்பணித்துறையிடம் மேற்கண்ட மருத்துவமனை அனுமதி பெற்றுள்ளதாக மருத்துவமனை சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5) மேற்கண்ட மருத்துவமனையின் கட்டிடத்தை கள ஆய்வு செய்து விதி மீறல் இருப்பின் உரிய சட்டபூர்வ நடவடிக்கை ஒரு மாத கால அவகாசத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து கொள்கிறோம்."

7. மதுரை சுகம் மருத்துவமனையின் சார்பாக அவ்மருத்துவனை அனுமதி அளித்தன்பேரில் Programme Officer 17.12.2024 அன்றை நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

(1) அனுமதிக்கு மாறாக எவ்வித கட்டிடமும் கட்டப்படவில்லை. மதுரை மாநகராட்சி அனுமதி அளித்த பிளான்படி மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

(2) மருத்துவமனையின் முன்புறம் போதிய இடவசதி அளிக்கப்பட்டுள்ளது.

(3) மருத்துவமனையின் உள்புறம், இரு சக்கர வாகனம் நிறுத்த இடவசதி அளிக்கப்பட்டுள்ளது.

(4) கிருதுமால் நதியை ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை. மாறாக, கால்நடைகள் நதியில் விழாமல் இருக்க தடுப்பு வேலி மட்டும் அமைக்கப்பட்டுள்ளது.

8. மனுதாரரின் மனுக்கள், வாக்குமூலம், மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையரின் அறிக்கை, உதவிப்பொறியாளர்களின் வாக்குமூலம், சுகம் மருத்துவமனையின் சார்பாக அதன் Programme Officer- அளித்த வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ல் கதவு எண்.99/47–ல் இயங்கும் சுகம் மருத்துவமனையின் கட்டிடம், அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடமும், இடைவெளிவிடாமலும், வாகனம் நிறுத்த இடவசதி அளிக்காமலும், கிருதுமால் நதியை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதாகவும், எனவே அக்கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர்ப்புற ஊரமைப்பு சட்டம் 1971–ன் படியும், தனது மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்காத மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சுகம் மருத்துவமனையின் கட்டிடத்திற்கு 22.10.2009–ல் வரைபட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதும், இம்மருத்துவமனைக்கு பார்க்கிங் வசதியில்லை என்பதும், கிருதுமால் நதியிலிருந்து 3 மீட்டர் இடைவெளியில் இம்மருத்துவமனை அமைந்துள்ளது என்பதும், இந்நதியை ஒட்டி பொது பாதை அமைக்க பொதுப்பணித்துறையிடம் அனுமதி பெற்றிருப்பதும், மேற்படி மருத்துவமனையிடம் சொத்துவரி ஆண்டிற்கு ரூ16,764/- வசூலிக்கப்பட்டு வருவதும், இம்மருத்துவமனையில் பணிபுரியும் 6 பணியாளர்களுக்கு தொழில் வரி வசூலிக்கப்படுவதும், மேலும், மேற்படி மருத்துவமனை கட்டிடத்தை கள ஆய்வு செய்து விதி மீறல் இருப்பின் உரிய சட்டபூர்வ நடவடிக்கை ஒரு மாத கால அவகாசத்தில் எடுக்கப்படும் என்பதும், மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப்பொறியாளர்களின் வாக்குமூலத்தின் மூலம் அறிய முடிகிறது.

சுகம் மருத்துவமனை அனுமதிக்கு மாறாக கட்டப்படவில்லை எனவும், மதுரை மாநகராட்சி அனுமதி அளித்த பிளான்படி கட்டப்பட்டுள்ளது என்பதும், வாகனம் நிறுத்த மருத்துவமனையின் உள்புறம் இடவசதி உள்ளது என்பதும், மேலும், மருத்துவமனையின் முன்புறம் போதிய இடவசதி அளிக்கப்பட்டுள்ளது என்பதும், கிருதுமால் நதியை ஆக்கிரமித்து மருத்துவமனை கட்டிடம் கட்டப்படவில்லை எனவும், மாறாக கால்நடைகள் நதியில் விழாமல் இருக்க தடுப்பு வேலி மட்டும் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், எதிர்மனுதாரரான சுகம் மருத்துமனையின் Programme Officer-ன் வாக்குமூலத்தின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில் மனுதாரர் சுகம் மருத்துவமனை அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்றும், கிருதுமால் நதியை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது என்றும், வாகனம் நிறுத்த இடவசதி மற்றும் மருத்துமனை கட்டிடத்தின் நான்குபுறமும் இடைவெளி விடவில்லை எனவும் கூறியுள்ள நிலையில், எதிர் மனுதாரரான சுகம் மருத்துவமனையின் Programme Officer மேற்கண்ட புகார்களை மறுதலித்த நிலையிலும், மருத்துவமனையில் பார்கிங் வசதி இல்லை என்று மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவிப்பொறியாளர்கள் குறிப்பிட்டுள்ள நிலையில், கிருதுமால் நதி ஆக்கிரமிப்பு தொடர்பான புகார் குறித்து நீர்வளத் துறையுடன் இணைந்தும், setback மற்றும் பார்க்கிங் இடம் குறித்து, மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவிப்பொறியாளர்கள் தங்களுடைய வாக்குமூலத்தில் உறுதி அளித்தவாறு ஒரு மாத காலத்திற்குள் கள ஆய்வு மேற்கொண்டு, கள ஆய்வின் அடிப்படையில் அரசு விதிமுறைப்படி தகுதி வாய்ந்த அலுவலரிடம் (Competent Authority) திட்ட அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொண்டு, தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971–ன்படியும், பகுதி VIII, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998–ன் படியும், தேவையிருப்பின் அரசாணை (நிலை) எண்.7,

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023–ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2024–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்,

1) திரு.ஆர்.மயில்சாமி,
பிளாட் எண். 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புது விளாங்குடி, மதுரை 18.

2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை 2.

3) உதவி ஆணையர்,
மண்டலம் 3 (மத்தியம்),
மதுரை மாநகராட்சி, மதுரை 2.

4) உரிமையாளர்,
சுகம் சிறப்பு மருத்துவமனை,
மகபூப்பாளையம்,
அரசரடி ரோடு,
99/47, T. B ரோடு,
மதுரை 625 016.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

6) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
எண்.75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்</u>:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ. / உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை–600 032

31/12/24